E. G. Monk, 1819-1900

Angel Voices
8.5.8.5.8.4.3



பாமாலை 473 தூதர் திரள் ஆர்ப்பரிக்க

1 தூதர் திரள் ஆர்ப்பரிக்க
தேவாசனமுன்
கீத வாத்தியம் ஒலிக்க
அல்லும் பகலும்
நீரே தேவன் நீரே ராஜன்
வானாசனன் என்றென்றும்.

2 கற்பனைக்கு கண்களுக்கு
எட்டாத பரன்
பாவிகளின் பாட்டிசைக்கு
இம்மானுவேலர்
செவி சாய்க்க இசைவாரோ
மகிழ்வாரோ ஆம் என்றேன்

3 சர்வலோகமும் படைத்தீர்
மகிழ்வுறவே
இன்னிசையும் நீர் கொடுத்தீர்
புகழ் பெறவே
கைத்திறனும் கைத்தாளமும்
எக்காலமும் உமதே

4 உன்னதத்தில் உந்தன் முன்பு
வணங்கி நின்றோம்
உமக்கே உரியதென்று
வழங்க வந்தோம்
ஆவி ஆத்துமா சரீரம்
எக்காலமும் உம் சொந்தம்

5 வல்லமை மாட்சிமை புகழ்
என்றும் உமக்கே
தந்தை சுதன் தூய ஆவி
திரியேகருக்கே
வணக்கம் வையகம் எங்கும்
துதி கேட்கும் அவர்க்கே